உதவி அமர்வு நீதிமன்றம், உத்தமபாளையம்.
முன்னிலை : திரு. எம்.சிவாஜி செல்லையா, L.L.M.
உதவி அமர்வு நீதிபதி, உத்தமபாளையம்.
2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 17 ம் நாள் வெள்ளிக்கிழமை

**அமர்வு வழக்கு எண் 89/2023**

*(CNR No.TNTH050013402023*

| | |
|---|---|
| குற்றம் முறையிடுபவர் | அரசுக்காக காவல் ஆய்வாளர், கம்பம் வடக்கு காவல் நிலையம். |
| எதிரியின் பெயர் | ஜெகன்(22/22), த/பெ.செல்லத்துரை |
| குற்ற தகவல் | இ.த.ச. 294(b), 307(ii) பிரிவின் கீழ். |
| எதிரிகளின் பதில் | குற்றவாளி இல்லை. |
| நீதிபதியின் முடிவு | குற்றவாளி இல்லை. |
| காவல் நிலையத்தின் பெயரும், குற்ற எண்ணும். | கம்பம் வடக்கு காவல் நிலைய குற்ற எண் 358/2022 |
| தீர்ப்பு: | முடிவில், இவ்வழக்கின் எதிரி இ.த.ச.294(b), 307 பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு R.P.R.No.04/ 2024 என கண்டு அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சுமார் 17.5 செ.மீ. நீளமுள்ள பிளாஸ்டிக் கைப்பிடி போட்ட சில்வர் கத்தி– ஒன்று (சில்வர் பாகத்தின் நீளம் சுமார் 9 செ.மீ. பிளாஸ்டிக் பாகத்தின் நீளம் சுமார் 8.5 செ.மீ) பயனற்றது என்பதால், மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்கப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த அமர்வு வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்னர் 14.07.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை கூடுதல் வழக்கறிஞர் திரு. A.சாணக்கியன், M.A., B.L., அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.அருண்குமார், B.A,B.L., அவர்களும் முன்னிலையாகி, விசாரணை நடைபெற்று வந்த போது, இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளுக்கு கேட்பு நல்கியும், இதுநாள் வரையில் என் ஆய்வில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும் :

**<u>தீர்ப்புரை</u>**

இந்த வழக்கின் வாதிக்கும், எதிரிக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்த நிலையில், வாதி கடந்த 13.11.2022ம் தேதி இரவு 22.00 மணிக்கு கம்பம் புதுக்குளம் ரோட்டில் அரசு டாஸ்மார்க் கடைக்கு மேற்கே உள்ள ரோட்டில் ஆலமரத்திற்கு பக்கத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்தபோது அங்கு வந்த எதிரி ஜெகன், வாதியை பார்த்து ஏண்டா தேவிடியா மகனே நான், உன் கடைக்கு வந்து தெருவுல நின்று பேசிக்கொண்டு இருந்தபோது அந்த இடத்திற்கு வரக்கூடாது என்று நாலு பேர் முன்னாடி என்னை அசிங்கப்படுத்தி விட்டுட்டா புண்ட மகனே, அந்த தெருவு என்ன, உன் அப்பன் வீட்டு இடமாடா என்று பிறர் அருவருக்கத்தக்க வகையில் பொது இடத்தில் கெட்டவார்த்தையால் தரக்குறைவாக பேசியதாகவும், அதனைத்தொடர்ந்து என்னை அசிங்கப்படுத்திய உன்னை உயிரோடு விடமாட்டேன்டா, இத்தோடு செத்து தொலைந்து போடா தேவிடியா மகனே என்று சொல்லி கையில் வைத்திருந்த கத்தியால் வாதி சிவனேசனின் இடது கைபுஜத்தில் குத்தி சிறுகாயத்தையும், இடதுபக்க விலாவில் குத்தி கொடுங்காயத்தையும் ஏற்படுத்தி கொலை முயற்சி செய்தததாகவும், எதிரி மீது பிரிவு–294(b), 307(ii)இதசவின்கீழ் கம்பம் வடக்கு காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** வழக்கு முதல்நிலை விசாரணை நீதிமன்றமான உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் முதல்நிலை விசாரணை பதிவேட்டு வழக்கு எண் 16/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரி முன்னிலையான உடன் அரசு சார்ந்துள்ள ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. 207ன் கீழ் எதிரிக்கு இலவசமாக கொடுக்கப்பட்டது.

**3.** எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச. 307 பிரிவின் கீழான குற்றச்சாட்டு அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கப்படத்தக்கது என்பதால், மேற்படி நீதித்துறை நடுவர் இவ்வழக்கினை தேனி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, அந்நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண் 89/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**4.** எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான உடன் இரு தரப்பு வாதங்களை கேட்டு, எதிரி மீது இ.த.ச. 294(b), 307 பிரிவுகளின்கீழ் குற்றச்சாட்டுக்களை வனைய போதிய முகாந்திரம் இருந்ததால், அவருக்கு எதிராக மேற்படி பிரிவின் கீழ் எழுத்துமூலமாக குற்றச்சாட்டு வனைந்து, அதனை எதிரிக்கு தமிழில் விளக்கிக் கூறி கேட்ட போது, எதிரி அதனை மறுத்து, தான் குற்றவாளி இல்லை என்று கூறினார். ஆகவே, அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டது.

**5.** இந்த வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. இவ்வழக்கில் கத்தி– சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் விபரம் வருமாறு :**

அ.சா.1 சிவனேசன் தனது சாட்சியத்தில், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையது என்றும், அது அ.சா.ஆ.1 என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

**7.** அ.சா.2 ராம்ஜிபிரபு தனது சாட்சியத்தில் வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை எதிரியை தனக்கு தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

**8.** அ.சா.3 சந்தோஷ் தனது சாட்சியத்தில், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை எதிரியை தனக்கு தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

**9.** அ.சா.4 சஞ்சய் தனது சாட்சியத்தில், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை எதிரியை தனக்கு தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

**10**. அ.சா.5 காவல் ஆய்வாளர் திரு.பிச்சைபாண்டியன் தனது சாட்சியத்தில், கடந்த 15.11.2022ம் தேதியன்று கம்பம் வடக்கு காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது காலை சுமார் 6.30 மணிக்கு கம்பம் வடக்கு காவல்நிலைய குற்ற எண். 358/22 பிரிவுகள் 294(b), 307 இ.த.ச.பிரிவின் கீழ் சார்பு ஆய்வாளர் விஜய் ஆனந்த் என்பவர் அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்திருந்ததாகவும், அதை தான் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடத்திற்கு காலை 7.00மணிக்கு சென்று, அங்கு சாட்சிகள் பிரபாகரன், சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.3 மாதிரி வரைபடம்,, அ.சா.ஆ.4 பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், பின்னர் சாட்சிகள் சிவனேசன், ராம்ஜிபிரபு, சந்தோஷ், பிரபாகரன், சுரேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கில் எதிரியை தேடியதில் தனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் 15.11.2022ம் தேதி காலை 11.30 மணிக்கு கம்பம் மணிக்கட்டி ஆலமரம் பிரிவில் வைத்து அடையாளம் கண்டு எதிரியின் உறவினர்களிடம் தெரிவித்து வழக்கு விவரத்தை கூறி எதிரியை கைது செய்ததாகவும், பின்னர் சாட்சிகள் சந்திரசேகர், அன்பழகன் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கம்பம் புதுக்குளம் ரோடு டாஸ்மாக் கடைக்கு மேற்கே புதரிலிருந்து எடுத்து ஆஜர் செய்த சுமார் 17.5 செ.மீ நீளமுள்ள பிளாஸ்டிக் கைப்பிடி போட்ட சில்வர் கத்தி ஒன்றை அதே சாட்சிகள் முன்பு அ.சா.ஆ.6 அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், கைப்பற்றப்பட்ட அந்த கத்தி சா.பொ.1 எனவும், பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து தக்க வழிநடை மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், கைப்பற்ற வழக்கு சொத்திற்கு படிவம் 91 தயார் செய்து

நீதிமன்றத்தில் RPR.275/22 ன் படி ஒப்படைத்ததாகவும், அது அ.சா.ஆ.7 எனவும் அதன்பின்னர் விடுப்பில் சென்ற ஆய்வாளர் சரவணன் பணிக்கு திரும்பியதால் வழக்கு கோப்பை அவரிடம் மேல்விசாரணைக்காக ஒப்படைத்ததாகவும், அதன்பின்னிட்டு ஆய்வாளர் சரவணன் கடந்த 01.02.2023 ம் தேதியன்று சாட்சி சஞ்சய், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், அதன்பின்னர் அன்றைய தினமே காயம் பட்ட வாதிக்கு மருத்துவர் சிகிச்சை அளித்த மாணிக்கம் என்பவரை விசாரித்து காயம் சான்று பெற்றுள்ளதாகவும், அது அ.சா.ஆ.8 எனவும், கம்பம் அரசு மருத்துவமனையில் அ.சா.1 சிவனேசனுக்கு முதலுதவி அளித்த மருத்துவர் சரண்யா என்பவரை விசாரித்து அ.சா.ஆ.9 விபத்து பதிவேட்டு சான்றை பெற்றுள்ளார் என்றும், பின்னர் அதே நாளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த கம்பம் வடக்கு காவல்நிலைய சார்பு ஆய்வாளர் விஜய் ஆனந்தை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் இறுதி விசாரணை முடித்து எதிரி ஜெகன் மீது குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிவுற்றன.

**11.** அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக உள்ள பகுதி குறித்து கு.வி.மு.ச. 313 ன் கீழ் விளக்கி வினவிய போது, எதிரி மறுத்தார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்று கூறினார்.

<u>12. தீர்வுக்குரிய பிரச்சனை :</u>

இந்த வழக்கின் எதிரியின் மீது சுமத்தப்பட்ட இதச 294(b), 307 பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

<u>13. தீர்வு :</u>

இவ்வழக்கின் அரசு தரப்பு புலன் விசாரணையில், இந்த வழக்கின் புகார்தாரரான அ.சா.1 சிவனேசனுக்கும், எதிரி ஜெகனுக்கும் முன்விரோதம் இருந்து வந்த நிலையில், கடந்த 13.11.2022 ம் தேதி இரவு 22.00 மணிக்கு கம்பம் புதுக்குளம் ரோட்டில் அரசு டாஸ்மார்க் கடைக்கு மேற்கே உள்ள ரோட்டில் ஆலமரத்திற்கு பக்கத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்தபோது அங்கு வந்த எதிரி ஜெகன், அ.சா.1 ஐ பார்த்து ஏண்டா தேவிடியா மகனே நான், உன் கடைக்கு வந்து தெருவுல நின்று பேசிக்கொண்டு

இருந்தபோது அந்த இடத்திற்கு வரக்கூடாது என்று நாலு பேர் முன்னாடி என்னை அசிங்கப்படுத்தி விட்டுட்டா புண்ட மகனே, அந்த தெருவு என்ன, உன் அப்பன் வீட்டு இடமாடா என்று பிறர் அருவருக்கத்தக்க வகையில் பொது இடத்தில் கெட்டவார்த்தையால் தரக்குறைவாக பேசியதாகவும், அதனைத்தொடர்ந்து என்னை அசிங்கப்படுத்திய உன்னை உயிரோடு விடமாட்டேன்டா, இத்தோடு செத்து தொலைந்து போடா தேவிடியா மகனே என்று சொல்லி கையில் வைத்திருந்த கத்தியால் அ.சா.1 ன் இடது கைபுஜத்தில் குத்தி சிறுகாயத்தையும், இடதுபக்க விலாவில் குத்தி கொடுங்காயத்தையும் ஏற்படுத்தி கொலை முயற்சி செய்தததாகவும், எதிரி மீது இ.த.ச.294(b), 307 பிரிவின் கீழ் கம்பம் வடக்கு காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக அரசு தரப்பு கூடுதல் வழக்கறிஞர் வாதிட்டார்.

**14.** இதற்கு மாறாக, எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், அரசு தரப்பு எதிரி மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டை நிரூபிக்கவில்லை என்றும், அ.சா.1 கொடுத்த பொய் புகாரின் பேரில் சரிவர வழக்கை பரிசீலிக்காமல் காவல் ஆய்வாளர் தவறாக வழக்கு பதிவு செய்து, சம்பவ இடம் செல்லாமல், காவல் நிலையத்தில் வைத்து ஆவணம் மற்றும் சாட்சிகளை தயார் செய்து, எதிரி மீது தவறாக குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், இவ்வழக்கில் அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கும், எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், புலனாய்வு அதிகாரியான அ.சா.3 ஐ தவிர, இந்த வழக்கின் முக்கிய சாட்சிகளான பாதிக்கப்பட்ட நபரும், புகார்தாரருமான அ.சா.1 மற்றும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் எதிரிகளை குற்ற சம்பவத்துடன் இணைத்து சாட்சியம் அளிக்காமல், பிறழ்சாட்சியாகி விட்டார்கள் என்றும், எனவே, வழக்கு பதிவு செய்ததிலிருந்து ஒவ்வொரு நிலையிலும் அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகங்கள் தோன்றுவதால் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என வாதிட்டார்.

**15.** அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையில் 13 பட்டியல் சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், புகார் கொடுத்த சாட்சி, சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் மற்றும் புலனாய்வு அதிகாரி ஆகியோர்கள் மட்டுமே அரசு தரப்பில் அ.சா.1, அ.சா.2 முதல் அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மற்ற சாட்சிகள் அரசு தரப்பில் விலக்களிக்கப்பட்டு

முடிக்கப்பட்டுள்ளார்கள்.

**16.** அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்க புகார் கொடுத்த சாட்சியாக அ.சா.1 சிவனேசன் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், "**வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், எதிரியை தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை**" என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். புகார் வாக்குமூலம் கொடுத்த பாதிக்கப்பட்ட நபரே அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பில் சொல்வது போல் எதிரியால்தான் அ.சா.1க்கு உண்மையிலேயே காயம் ஏற்பட்டதா என்பதிலும், புகார் வாக்குமூலம் உண்மையானதா என்பதிலும் பலத்த சந்தேகம் எழுகிறது.

**17.** இவ்வழக்கில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக ராம்ஜிபிரபு, சந்தோஷ், சஞ்சய் ஆகியோர்கள் அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகளாக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் தங்களது சாட்சியத்தில், "**வழக்கு சம்பந்தமாக தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும், எதிரியை தங்களுக்கு தெரியாது எனவும்**" என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்கள். ஆகவே, அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலிக்கும் போது, சம்பவம் நடக்கும் போது அவர்கள் உண்மையிலேயே சம்பவ இடத்தில் இருந்தார்களா என்பதிலும், அவர்கள் சம்பவத்தை கண்ணுற்றார்களா என்பதிலும், சம்பவம் உண்மையிலேயே நடைபெற்றதா என்பதிலும் சந்தேகம் எழுகிறது.

**18.** மேலே குறிப்பிட்டவாறு புகார் வாக்குமூலம் கொடுத்த சாட்சியான அ.சா.1, கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான அரசு தரப்பு சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், புலன் விசாரணை செய்து குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்த அ.சா.5 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியம் மற்றும் அவர் தரப்பில் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களை மட்டும் வைத்து கொண்டு எதிரியை குற்ற தீர்ப்புக்கு உள்ளாக்க முடியாது என இந்நீதிமன்றம்

தீர்மானிக்கிறது.

**19.** மேலே பரிசீலித்துள்ள வகையில் வழக்கு பதிவு செய்ததிலிருந்து ஒவ்வொரு நிலையிலும் அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகங்கள் தோன்றுவதால் இந்த சந்தேகங்களின் பலன்கள் எதிரிக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**20.** ஆகையால், இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்களை கவனமாக பரிசீலனை செய்யும் போது, அவைகள் எதிரியை குற்ற செய்கையுடன் இணைக்கும் வகையில் இல்லை என்பது தெரிய வருகிறது. எனவே, எதிரி மீது இ.த.ச.294(b).307 பிரிவின்கீழ் உள்ள குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரியை இவ்வழக்கில் குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**21.** முடிவில், இவ்வழக்கின் எதிரி இ.த.ச.294(b).307 பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு R.P.R No.04/2024 என கண்டு அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சுமார் 17.5 செ.மீ. நீளமுள்ள பிளாஸ்டிக் கைப்பிடி போட்ட சில்வர் கத்தி– ஒன்று (சில்வர் பாகத்தின் நீளம் சுமார் 9 செ.மீ. பிளாஸ்டிக் பாகத்தின் நீளம் சுமார் 8.5 செ.மீ) பயனற்றது என்பதால், மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்கப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 17.07.2026 ம் நாள் இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M SHIVAJI CHELLIAH

Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.17 14:51:35 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**உத்தமபாளையம்.**

<u>அரசு தரப்பு சாட்சிகள் :</u>

| | | |
|---|---|---|
| அ.சா.1 | ... | சிவனேசன் |
| அ.சா.2 | ... | ராம்ஜிபிரபு |
| அ.சா.3 | ... | சந்தோஷ் |
| அ.சா.4 | ... | சஞ்சய் |
| அ.சா.5 | ... | பிச்சைபாண்டியன், காவல் ஆய்வாளர் |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | ... | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து மட்டும் |
| அ.சா.ஆ.2 | ... | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | ... | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.4 | ... | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | ... | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.6 | ... | அத்தாட்சி |
| அ.சா.ஆ.7 | ... | படிவம்–91 |
| அ.சா.ஆ.8 | ... | காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.9 | ... | விபத்து பதிவேட்டு நகல் |

<u>அரசு தரப்பு சான்று பொருள் :</u>

| | | |
|---|---|---|
| அ.சா.பொ.1 | ... | சுமார் 17.5 செ.மீ. நீளமுள்ள பிளாஸ்டிக் கைப்பிடி போட்ட சில்வர் கத்தி– ஒன்று<br>சில்வர் பாகத்தின் நீளம் சுமார் 9 செ.மீ<br>பிளாஸ்டிக் பாகத்தின் நீளம் சுமார் 8.5 செ.மீ |

<u>எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள், சான்று பொருள் : இல்லை.</u>

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.17 14:51:44 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**உத்தமபாளையம்.**

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHAMAPALAYAM.**

PRESENT : Thiru.M.Shivaji Chelliah, L.L.M.,
Assistant Sessions Judge, Uthamapalayam.

**Case Summary**

**Sessions Case No.89/2023**

***(CNR No.TNTH050013402023)***

**PRC.No.16/2023**

Cumbum North Police Station Cr.No.358/2022 u/s.294(b), 307 IPC

| Sl.No. | Particulars | |
|---|---|---|
| 1. | Name of the Police Station and Crime No. | Cumbum North Police Station Cr.No.358/2022 u/s.294(b), 307 IPC |
| 2. | Name of the Accused. | Jegan(22/22), S/o.Chelladurai |
| 3. | Occupation | -- |
| 4. | Date of Incident. | 13.11.2022 |
| 5. | Date of Arrest. | 15.11.2022 |
| 6. | The Period of remand of the Accused. | 15.11.2022 to 15.12.2022 |
| 7. | Details of Bail. | Madurai Bench of Madras High court in Crl.OP. (MD) No.21946/2022 dated.13.12.2022 released on 15.12.2022. |
| 8. | Date of filing of the Final Report before the Magistrate Court | 15.03.2023 |
| 9. | Date Committal of the case of the Court of Session. | 19.06.2023 |
| 10. | The Date of questioning of the accused under Section 228, 240, 246 and 251 of the code, as the case may be. | 25.03.2025 |
| 11. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts, except routine like petitions under Section 317 of the code etc., | Nil |
| 12. | Date of initiation of trial. | 27.06.2025 |
| 13. | Date of conclusion of trial. | 02.07.2026 |

<table>
<tr><td>14.</td><td>Date of examination of the accused under Section 313 of the code.</td><td>14.07.2026</td></tr>
<tr><td>15</td><td>Examine of Chief and Cross.</td><td>
<table>
<tr><th>Witness</th><th>Cheif</th><th>Cross</th></tr>
<tr><td>PW1 Sivanesan(Hostile)</td><td>30.06.2026</td><td>30.06.2026</td></tr>
<tr><td>PW2 Ramjiprabu(Hostile)</td><td>30.06.2026</td><td>30.06.2026</td></tr>
<tr><td>PW3 Santhosh(Hostile)</td><td>30.06.2026</td><td>30.06.2026</td></tr>
<tr><td>PW4 Sanjay(Hostile)</td><td>30.06.2026</td><td>30.06.2026</td></tr>
<tr><td>PW5 Pitchaipandian</td><td>02.07.2026</td><td>02.07.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>16.</td><td>Date of Judgment.</td><td>17.07.2026</td></tr>
</table>

M SHIVAJI CHELLIAH

Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.17 14:51:54 +0530

**Assistant Sessions Judge,**
**Uthamapalayam.**